தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 பிப்ரவரி 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை நிறுத்திவைத்தல்

மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. க. ர. நல்ல சிவன்) : இன்றைய முதல் அலுவல் " கேள்விகள் பதில்கள் " ஆகும். நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் இன்றைய கேள்வி நேரத்தை நிறுத்திவைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டபடியால், அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 22-வது பிரிவின் கீழ் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ளவேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. க. ர. நல்ல சிவன்): இப்பொழுது அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின் கீழ் பேரவைத் தலைவரின் தேர்தல் நடக்கவிருக்கிறது. அப் பதவிக்கு, வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டப் பேரவையின் 4(4) விதியின்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர்கள், முன்மொழிந்தவர்கள், வழிமொழிந்தவர்கள் ஆகிய வர்களின் பெயரை நான் முதன்முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்கவேண்டும்.